## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று,உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயப் பிரிவில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து நிதியத்தின் கூட்டுத்தாபனத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது,கூட்டுத்தாபனத்தின்தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தின்கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும்

கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின்நிதி அறிக்கையிடல் நடைமுறையை மேற்பார்வை செய்தல் தொடர்புபட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையில் கூட்டுத்தாபனத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகள் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்து நிலைத்திருத்தல் தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை

அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின்தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் கூட்டுத்தாபனத்தின்பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கூட்டுத்தாபனத்தின்கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| குறித்த நியமத்துடனான தொடர்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) **எல்கேஎஸ்-01 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**: ரூபா 39,388,893 தொகையான கடன்பட்டோர் செலவு மீதிகள் அத்தகைய கணக்கின் வரவு மீதிக்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டிருந்த அதேநேரம் முற்பண மீதிகளின் வரவு மீதிகள் மற்றும் ரூபா 521,242,734 தொகையான கடன்கொடுத்தோர்கள் எல்கேஎஸ்1- நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு முரணாக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அத்தகைய கணக்குகளிற்கு செலவு மீதிகளிற்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டிருந்தது. ஆகையால், நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் முறையே ரூபா 39,388,893 மற்றும் ரூபா 521,242,743 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | இந்த அவதானிப்புக்களின் கீழ் குறிப்பிடப்பட்ட விடயங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் அடுத்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கின்ற போது தனித்தனியாக வரவு மற்றும் செலவு மீதிகளை சமர்ப்பிப்பதற்கு இணங்கப்பட்டது. | சாதகமான பொருண்மையான தவறான கூற்றுக்களை தவிர்ப்பதற்காக நிதிக்கூற்றுக்களிற்கு அனைத்து மீதிகளையும் எடுத்து வருவதற்கு குறித்த கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. |
| (ஆ) எல்கேஎஸ் - 16 - ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் 51 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ரூபா 17,844,731 அண்ணளவான கிரயமுள்ள முழுமையான பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்கள் அத்தகைய சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலத்தை மதிப்பிடாமலும் கணக்கிடாமலும் கூட்டுத்தாபனத்தால் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. | விலை மதிப்பீட்டு திணைக்களத்தின் உதவியுடன் 2019 ஆம் ஆண்டில் ஆரம்ப மதிப்பீடும் 2020 ஆம் ஆண்டில் மீள் மதிப்பீடும் செய்வதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு இணங்கப்பட்டது. | சொத்தொன்றின் குறைந்து செல்லும் பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட்காலம் அதிகுறைந்தது ஒவ்வொரு நிதியாண்டும் மீள்மதிப்பிட வேண்டியதுடன் முன்னைய மதிப்பீடுகளிடமிருந்து ஏதும் எதிர்பார்ப்புக்கள் வித்தியாசப்பட்டால் அவை கணக்கீட்டு மதிப்பீட்டிலுள்ள மாற்றமாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து 2015 வரை பெறப்பட்ட மதிப்பீட்டு அறிவித்தல்களின் பிரகாரம் ரூபா 338,733,800 மற்றும் ரூபா 115,003,889 தொகைகள் முறையே மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான பெறுமதி சேர் வரி (வற்) இன் செலுத்த வேண்டிய மீதிகள் மற்றும் பெறுமதி சேர் வரி மீதான மிகையறவீடுகளாக காட்டப்பட்டிருந்தது. எனினும், வற் மீதான மிகையறவீடுகளிற்கான ஏற்பாடுகள் 2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டிலிருந்து நிதிக்கூற்றுக்களில் வற் மீதான மிகை அறவீடுகளிற்காக ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு கவனத்தில் கொண்டு இணங்கப்பட்டது. கூட்டுத்தாபனத்தின் நிதிப் பற்றாக்குறையில் குறித்த கால பகுதிக்காக வற் மற்றும் மிகையறவீடுகளை செலுத்த முடியாதிருந்தது. எனினும், கூட்டுத்தாபனமானது தனக்கு கிடைக்க வேண்டிய பிடித்து வைத்தல் வரிக்கு எதிராக செலுத்த வேண்டிய வற் வரியை கழிப்பதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கோரிக்கை மேற்கொண்டது. | நிதிக்கூற்றுக்களில் சரியான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2015 இன் 13 ஆம் இலக்க திருத்தப்பட்ட பொருளாதார சேவைகள் கட்டண திருத்தச் சட்டத்தின் 02 ஆம் பிரிவின் பிரகாரம் ரூபா 45,009,460 மற்றும் ரூபா 13,654,032 தொகையான முறையே பொருளாதார சேவைக் கட்டணங்கள் மிகை அறவீட்டுக் கட்டணங்கள் செலுத்தப்பட்டோ 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களிற்கோ கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ஈஎஸ்சீ மற்றும் மிகையறவீட்டுத்தொகைகள் கவனத்திற்கொள்ளப்பட்டது. | சாதகமான பொருண்மையான தவறான கூற்றுக்களை தவிர்ப்பதற்காக நிதிக்கூற்றுக்களிற்கு அனைத்து மீதிகளையும் எடுத்து வருவதற்கு தேவையான கவனம் செலுத்த வேண்டியுள்ளது. |

### 1.5.3 இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட செலுத்த வேண்டிய பெறுமதிசேர் வரி மீதிக்கும் கூட்டுத்தாபனத்தால் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட விரிவான பட்டியல்களில் காட்டப்பட நேரொத்த மீதிகளிற்குமிடையில் ரூபா 4,728,291 விளக்கமளிக்கப்படாத வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | ரூபா 4,728,961 பெறுமதியான செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி வித்தியாசமானது திரட்டு தொகையானதுடன் இது 2004 ஆம் ஆண்டிலிருந்து தோன்றிய தொகையாகும். இவ் மீதியை இணக்கம் செய்வதற்கு இணங்கப்பட்டது. | நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு முன்னர் பேரேட்டு மீதிகளை பட்டியல்களுடன் இணக்கஞ் செய்வதற்கு கவனஞ் செலுத்தப்பட வேண்டியுள்ளது. |
| (ஆ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலுத்த வேண்டிய வற் மீதி தேசத்தை கட்டியெழுப்பும் வரி மீதி மற்றும் அதன் மீதான தண்டப் பண கட்டணங்கள் மீதிகளிற்கும் ஐஆர்டீ ஆல் உறுதிப்படுத்தப்பட்ட உரிய மீதிக்கும் இடையில் ரூபா 294,253,472 கூட்டுத்தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் உறதிப்படுத்தல்களில் காட்டப்பட்ட மீதிகளிலுமுள்ள வித்தியாசங்களை சரி செய்வதற்கும் இந்த ஆண்டின் போது அதனை தீர்ப்பனவு செய்வதற்கும் அவதானங்கள் செலுத்தப்பட்டது. | பேரேட்டு மீதிகளை ஐஆர்டி ஆல் உறுதிப்படுத்தப்பட்ட மீதிகளை இணக்கஞ்செய்வதற்கு கவனஞ் செலுத்தப்பட வேண்டியுள்ளது. |
| (இ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட இருப்பு மீதிக்கும் மீளாய்வாண்டிற்கான கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த இருப்பு சரிபார்த்தல் சுருக்கதாள்களிற்குமிடையில் ரூபா 14,665,991 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | ரூபா 14,447,714 வித்தியாச தொகை ரூபா 14,665,991 ஆக சரி செய்யப்படும் எனினும், இந்த வித்தியாசம் ரூபா 6,717,762 வரை குறைக்கப்பட்டதுடன் இந்த மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு முன்னர் பேரேட்டு மீதிகளை இருப்பு சரிப்படுத்தல் சுருக்க தாள்களுடன் இணக்கஞ் செய்வதற்கு கவனஞ் செலுத்தப்பட வேண்டியுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையால் (ஆர்டீஏ) ஒதுக்கப்பட்ட போக்குவரத்து வெளிச்ச முறைமையை ஸ்தாபிப்பது தொடர்பில் காட்டப்பட்ட பெற வேண்டிய மீதி ரூபா 57,313,904 ஆகவிருந்தது. ஆர்டீஏவிடமிருந்து பெறப்பட்ட உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் ரூபா 81,218,448 மீதியாகவிருந்ததுடன் இது ரூபா 28,904,544 வித்தியாசத்தை காட்டுகின்றது. | ஆர்டீயிடமிருந்து மொத்த சான்றுபடுத்தப்பட்ட சிட்டைகளை கூட்டுத்தாபனம் பெற்றுக்கொள்ளாமையால் ரூபா 23,904,544.00 வித்தியாசம் காட்டப்பட்டது. எனினும், ஆர்டீஏ இன் உறுதிப்படுத்தல் தொகை மற்றும் ஆர்டீஏ இன் வெளிச்ச முறைமைக்காக ஆர்டீஏயிடமிருந்து பெற வேண்டிய தொகைக்குமிடையில் வித்தியாசத்தை இணக்கஞ் செய்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | போக்குவரத்து வெளிச்ச முறைமைக்காக ஆர்டீஏயிடமிருந்து பெற வேண்டிய தொகையை இணக்கஞ் செய்வதற்கு கவனஞ் செலுத்தப்பட வேண்டியுள்ளது. |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூலச் சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (i) | முன்கொண்டு வரப்பட்ட வற் மீதிகள்.<br><br>செலுத்த வேண்டிய வற் | 11,362,032<br><br>29,568,451 | 2013 ஆம் ஆண்டிலிருந்து பட்டியல்கள் மற்றும் வயதுப் பகுப்பாய்வு பட்டியல்கள் மற்றும் வயதுப் பகுப்பாய்வு | முன்கொண்டு வரப்பட்ட வற் மீதிகள் ரூபா 11,362,032 மீதியாகும். இந்த தொகையை இணக்கஞ் செய்வதற்கும் இந்த ஆண்டிலிருந்து வயதுப் பகுப்பாய்வை தயார்படுத்துவதற்கும் இணங்கபட்டது. | வற் மீதிகளை திருப்திகரமாக சரிபார்ப்பதற்கும் ஏற்றுக் கொள்வதற்கும் பட்டியல்கள் மற்றும் வயதுப் பகுப்பாய்வு வழங்கப்பட வேண்டும். |
| (ii) | நிர்மாண உத்தரவாத நிதியத்தின் கடன் மீதி | 20,800,000 | கடன் உடன்படிக்கை | நிர்மாண உத்தரவாத நிதியமானது அதே அமைச்சின் கீழ் இருந்தமையால் அவ் நிதியத்தின் கடன் மீதியானது ரூபா 20,800,000 ஆக இருந்தது. உடன்படிக்கையானது தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. என்பதை தயவு செய்து கவனத்திற் கொள்ளவும். | உடன்படிக்கையானது தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (iii) | மீளளிக்கப்பட ாத வைப்புக்கள் | 2,043,712 | வயதுப் பகுப்பாய்வு | ரூபா 2,043,712 மீளளிக்கப்படாத வைப்புக்களிற்கு இந்த ஆண்டிலிருந்து வயதுப் பகுப்பாய்வொன்று தயாரிப்பதற்கு இணங்கப்படாது | மீளளிக்கப்படாத வைப்பு மீதிகளை (சரி செய்வதற்கும் ஏற்றுக்கொள்வதற்கு ம் கணக்காய்விற்காக வயதுப் பகுப்பாய்வு தயாரிக்கப்பட வேண்டும்) |
| (iv) | கொள்வனவு முற்பணம் (பேலியஹொ ட) | 21,484,69 4 | வயதுப் பகுப்பாய்வு | கொள்வனவு முற்பணம் (பேலியாஹொட) -ரூபா 21,484,694 இற்கு இந்த ஆண்டிலிருந்து வயதுப் பகுப்பாய்வொன்று தயாரிப்பதற்கு இணங்கப்படாது | கொள்வனவு முற்பணம்(பேலியாெ ஹாட) சரி செய்வதற்கும் ஏற்றுக்கொள்வதற்கு ம் கணக்காய்விற்காக வயதுப் பகுப்பாய்வு தயாரிக்கப்பட வேண்டும் |
| (v) | ஏனைய முற்பணங்கள் | 12,757,45 1 | வயதுப் பகுப்பாய்வு | ஏனைய முற்பணங்கள் ரூபா 12,757,451 இற்காக இந்த ஆண்டிலிருந்து வயதுப் பகுப்பாய்வை தயாரிப்பதற்கு இணங்கானப்பட்டது. | ஏனைய முற்பண மீதிகளை சரி செய்வதற்கும் ஏற்றுக்கொள்வதற்கு ம் கணக்காய்விற்காக வயதுப் பகுப்பாய்வு தயாரிக்கப்பட வேண்டும் |
| (vi) | உப ஒப்பந்த முற்பணங்கள . | 15,299,04 2 | வயதுப் பகுப்பாய்வு | உப ஒப்பந்த முற்பணங்கள் 15,299,042 இற்காகஇந்த ஆண்டிலிருந்து வயதுப் பகுப்பாய்வை தயாரிப்பதற்கு இணங்கானப்பட்டது | உப ஒப்பந்த முற்பண செய்வதற்கும் ஏற்றுக்கொள்வதற்கு ம் கணக்காய்விற்காக வயதுப் பகுப்பாய்வு தயாரிக்கப்பட வேண்டும் |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டியவைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 22,658,412 மற்றும் ரூபா 14,257,844 கடன்பட்டோர் மீதிகளின் அறவீடு 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 3 வருடங்கள் மற்றும் 5 வருடங்களிற்கு மேலாக நிலுவையாகவிருந்தமையால் சந்தேகத்திற்குரியதாகவிருந்தது. மேலும் நட்டக்கழிவிற்கான ஏற்பாடானது மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | ரூபா 233,710,931.00 தொகையான நிர்மாண கடன்பட்டோர் தொகையில் இப்போது வரையிலும் 36% (ரூபா 13,456,136.00) அறவிடப்பட்டிருந்தது. மொத்தப் பெறுமதியில் ரூபா 3,404,125.00 பெறுமதியான தொகையொன்று சட்ட நடவடிக்கைகளின் கீழுள்ளதுடன் ஏனைய மிகுதி மீதிகள் அறவீட்டு செயன்முறையின் கீழிருந்தது. | நிலுவை மீதிகளானது தாமதமில்லாமல் அறவிடப்பட வேண்டியுள்ளதுடன் அல்லது அத்தகைய நிலுவை மீதிகளின் உண்மைத்தனமையை உறுதிப்படுத்தியிருந்து. தொடர்பில் முறையான நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. |
| (ஆ) | ரூபா 111,390,740 மற்றும் ரூபா 131,651,672 தொகையான பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் கைவிடப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பிலுள்ள மிகுதி வருமதிகள் முறையே 3 தொடக்கம் 5 வருடங்கள் மற்றும் 5 வருடங்களிற்கு மேலாக நிலுவையாகவிருந்ததுடன் அத்தகைய மீதிகளின் அறவீடு சந்தேகத்திற்குள்ளாகியிருந்தது | ரூபா 111,390,740 மிகுதியாகவுள்ள நிலுவை தொகையால் ரூபா 12,661,031 தொகையானது இத்திகதி வரை அறவிடப்பட்டது. தென் மாகாணத்திலுள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து பெற வேண்டியிருந்த ரூபா 24,578,219 தொகையொன்று அத்தகைய அதிகார சபையின் நிதிகள் பற்றாக்குறையாக விருந்தமையால், அதனை அறவிட முடியாத நிலைமையிலிருந்தது. மொத்த பெற வேண்டிய மீதிகள் தொகையிலிருந்து மிகுதி மீதியானது அதனை அறவிடும் நிலைமையிலிருந்தது. | பல காலத்திற்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பில் பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு முறையான முறைமையொன்று காலாதாமதமில்லாமல் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2018 இன் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 31,088,182 மற்றும் 57,230,998 தொகையான உப ஒப்பந்தக்காரரிகளிடருமிருந்து பெறவேண்டிய தாமதக் கட்டணங்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 4 தொடக்கம் 6 வருடங்கள் மற்றும் 6 வருடங்களிற்கு மேலாக நிலுவையாகவிருந்தது. ஆனால், கூட்டுத்தாபனமானது அத்தகைய வருமதி மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 31,088,182 மற்றும் ரூபா 57,230,998 பெறவேண்டிய மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நிலுவை மீதிகளானது தாமதமில்லாமல் அறவிடப்பட வேண்டியுள்ளதுடன் அல்லது அத்தகைய நிலுவை மீதிகளின் உண்மைத்தனமையை உறுதிப்படுத்தியிருந்து. தொடர்பில் முறையான நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. |
| (ஈ) | வழங்குனர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 903,070 தொகையான முற்பண கொடுப்பனவு 2018 திசெம்பர் 31 வரையிலும் அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் 05 வருடங்களிற்கு மேலாக நிலுவையாகவிருந்தது. | இந்த வருடத்தில் இந்த தொகையை கண்டுபிடிப்பதற்கும் தீர்ப்பனவு செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | வழங்குனர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட முற்பண கொடுப்பனவை காலதாமதம் இல்லாமல் அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. |

### 1.6.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 11 பூர்த்தி செய்யப்பட்ட நிர்மாண செயற்திட்டங்கள் மற்றும் இடை நிறுத்தப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பில் பெறப்பட்ட ரூபா 15,523,744 தொகையான ஆரம்ப முற்பணங்கள் தீர்க்கப்படாதுள்ளது. அத்தகைய முற்பணங்களை தீர்ப்பனவு செய்வதற்கான சாத்தியத்தன்மை சந்தேகத்திற்குரியதாகவிருந்தது. | 2019 ஆம் ஆண்டில் உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்கு கவனஞ் செலுத்தப்பட்டது. | நீண்ட கால ஆரம்ப முற்பணங்களை காலதாமதம் இல்லாமல் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டியுள்ளது. |
| (ஆ) | நிர்மாண உத்தரவாத நிதியத்திதிடமிருந்து பெற வேண்டிய நிலுவையாகவுள்ள கடன்மீதியாக ரூபா 20,800,000 தொகை 2018 இன் நிதிக்கூற்றுக்களில் | நிர்மாண உத்தரவாத நிதியத்திடமிருந்து பெற வேண்டிய தீர்க்கப்பட்டிருக்காத ரூபா 20,800,000 கடன் நிலுவை மீதியானது | நீண்ட கால ஆரம்ப முற்பணங்களை காலதாமதம் இல்லாமல் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| | காட்டப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக மேற்கூறப்பட்ட கடன் மீதி தொடர்பில் 2018 இன் நிதிக்கூற்றுக்களில் ரூபா 99,127,060 செலுத்த வேண்டிய வட்டி மீதியொன்று காட்டப்பட்டிருந்தது. அத்தகைய நிலுவை மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதியின்மையால் நிர்மாண உத்தரவாத நிதியத்திற்கு தீர்க்கப்பட்டிருக்காத அதே நேரம் அதற்கான வட்டித்தொகையானது நிதியமானது ஒரே அமைச்சின் கீழுள்ளதால் அத்தகைய தொகையை கழிப்பதற்கு கலந்துரையாடலின் கீழுள்ளது. | எடுக்க வேண்டியுள்ளது. |
| (இ) | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கொங்ரீட் உற்பத்திகளை வழங்குவது தொடர்பில் ரூபா 11,939,738 முற்பணங்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 வருடங்களுக்கு மேலாக தீர்க்கப்படாது நிலுவையாகவிருந்தது. | அத்தகைய முற்பண தொகை ரூபா 13,032,687 ஆனது ரூபா 11,939,738 ஆக (2011 – 2013) ஆக திருத்தம் செய்யப்பட வேண்டியதுடன் 2019 ஆம் ஆண்டின் போது அத்தகைய தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது | நீண்ட கால ஆரம்ப முற்பணங்களை காலதாமதிற் இல்லாமல் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டியுள்ளது. |

**1.6.3 நிதிப்பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது ரூபா 1000 மில்லியன் கடன் இலங்கை வங்கியிடமிருந்து பெற வேண்டியிருந்தது. அந்தக் கடனில் ரூபா 432 மில்லியன் தொகையானது வங்கி மேலதிகப்பற்று மீதியின் தீர்ப்பனவிற்காக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 273 மில்லியன் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களின் சம்பளங்களை செலுத்துவதற்கு செலவழிக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக ரூபா 284 மில்லியன் தொகையானது கொங்ரீட் நிறுவனங்கள் மற்றும் நிர்மாண செயற்திட்ட வேலைகளிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. | ரூபா 1000 மில்லியன் கடன் தொகையில் ரூபா 273 மில்லியன் சம்பளங்களிற்காக செலுத்தப்பட்டிருந்தது என அவதானம் திருத்தப்பட்டிருந்தது. இந்த ரூபா 273 மில்லியன் தொகையானது நிர்மாண செயற்திட்டங்களில் ஈடுபடுத்தப்பட்ட ஊழியர்களின் நேரடி ஊழியா கிரயத்தையும் உள்ளடக்கின்றதுடன் இது நேரடி செயற்பாட்டு கிரயமாக ஏற்படுத்தப்பட்டிருந்தது. கூட்டுத்தாபனமானது காசுப் பாய்ச்சல் பிரச்சினையால் அந்தக் கடனை பெற வேண்டியுள்ளது. | கூட்டுத்தாபனத்தில் முறையான நடைமுறை மூலதன முகாமைத்துவத்தையுடைய காசுப்பாய்ச்சல் முகாமைத்துவத்தையும் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

மேற்கூறப்பட்ட கொங்ரீட் நிறுவனம் மற்றும் நிர்மாணச் செயற்திட்டங்களிடமிருந்து ரூபா 584 மில்லியன் தொகையான காசுப்பாய்ச்சல் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் உண்மையாக பெறப்பட்ட வருமானமானது மீளாய்வாண்டின் போது ரூபா 123 மில்லியனாக இருந்தது.

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 396 | ஏழு வருடங்களிற்கு மேலான ரூபா 846,280 பெறுமதியான 04 தேறப்படாத காசோலைகள் மற்றும் ஒரு வருடத்திற்கு மேலான ரூபா 212,527 பெறுமதியான இரண்டு மாற்றப்படாத காசோலைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 846,280 பெறுமதியான தேறப்படாத காசோலைகள் மற்றம் ரூபா 212,527 பெறுமதியான மாற்றப்படாத காசோலைகளை சரிசெய்வதற்கும் தீர்ப்பனவு செய்வதற்கும் குறிக்கப்படுவதுடன் இதுவரையில் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 156(ஆ) | சொத்துக்கள் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் அச்சொத்துக்களை முறையாக பயன்படுத்துவதற்கு பொறுப்பாகவிருக்க வேண்டும். எனினும் | பொதுமக்கள் மறுப்பால் அச்சொத்தை வேலைத்தளத்திலிருந்து அகற்றமுடியாதிருந்தது. எனினும், அத்தகைய சொத்துக்களானது 2016 வரையிலும் பயன்படுத்தப்பட்டது. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கேகாலை, இடத்திலுள்ள வீட்டு செயற்திட்டங்களிற்காக பயன்படுத்தப்பட்ட ரூபா 98 மில்லியன் பெறுமதியான நிலையான சொத்துக்கள் 2016 ஆம் ஆண்டிலிருந்து விளைவற்றிருந்தது. | அத்தகைய சொத்துக்களை கூட்டுத்தாபனத்தின் பொறுப்பில் எடுப்பதற்கோ அத்தகைய சொத்துக்களை பயன்படுத்துவதற்கோ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (ஆ) | நல்லாளுகைக்கான பொது முயற்சிகள் வழிகாட்டல்களின் மீதான 2003 யூன் 02 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 அம் பந்தி | நாளது வரையாக்கப்பட்ட வருடாந்த பாதீட்டு சபையில் நாளதுவரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் வரிசை அமைச்சு, பொது முயற்சிகள் திணைக்களம் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வேண்டப்பட்டவாறு அனுப்பியிருக்கவில்லை. | 2020 – 2023 இலிருந்து கூட்டிணைந்த திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்ரக எடுக்கப்பட்டு வருகின்றது 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீடு ஏற்கனவே தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | நாளதுவரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு விளைவானது முன்னைய ஆண்டிற்கான ரூபா 12,206,658 வரிக்கு முந்திய தேறிய இலாபத்துடன் ஒப்பிடும் போது ரூபா 18,523,726 வரிக்கு முந்திய தேறிய இலாபத்தை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 6,317,068 பாரிய முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. இந்த நிலைமைக்கு வருமானம் மற்றும் ஏனைய வருமானம் அதிகரித்தமை முக்கிய காரணங்களாக பங்களித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 ஆளணி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (i) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 489 ஆகவிருந்த அதே நேரம் உள்ளபடியான பதவியணி 628 ஆகவிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பு சரியானது மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்திற்காக பல அரச செயற்திட்டங்களை பெறப்பட்டமையால் அமைய மற்றும் ஒப்பந்த | கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை விஞ்சி பல வேறுபடுத்தல்களின் கீழ் வேலைக்கமர்த்தப்பட்ட ஊியர்கள் |

| | | | |
|---|---|---|---|
| | அதற்கிணங்க இது கூட்டுத்தாபனத்தின் பல்வேறு பதவிகளிற்கு 139 ஊழியர்களின் மிகையான ஆட்சேர்ப்பை காட்டுகின்றது. | அடிப்படையில் பல ஊழியர்களை வேலைக்கமர்த்த வேண்டியேற்பட்டது. முகாமைத்துவ சேவை திணைக்களம் இந்த நிலைமை பற்றி அறிவித்திருந்ததுடன் நிரந்தர ஊழியர்களிற்கு மேலாக அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு இது வரையில் புதிய பதவியணியினை சமர்ப்பித்திருந்தது. | தொடர்பில்லான தகவல்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கவனத்திற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளது. |
| (ii) | சிரேஷ்ட முகாமைத்துவத்தின் ஊழியர்களை உள்ளடக்கி நேரத்திற்கு நேரம் ஒப்பந்த அடிப்படையில் கூட்டுத்தாபனம் ஊழியர்களை வேலைக்கமர்த்திலிருந்து இரண்டு உயர் முகாமைத்துவ ஆளணிகள் மீளாய்வாண்டின் போது ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கமர்த்தப்பட்டிருந்த துடன் இது கூட்டுத்தாபனத்தின் செயலாற்றலை குறிப்பிடத்தக்களவு பாதிக்கின்றது. மேலும்,அங்கீகரிக்கப்பட்ட பதவியிலுள்ள 84 வெற்றிடங்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெற்றிடமாகவிருந்தது. | கூட்டுத்தாபனம் ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்களை வேலைக்கமர்த்தியிருந்தது. அவர்களில் உயர் முகாமைத்துவம் தவிர ஏனையோர் அவர்களுடைய செயலாற்றல் அடிப்படையில் நிரந்தரமாக்கப்பட்டனர். தொழில் மற்றும் அனுபவ இயலுமைகளை கருத்திற்கொண்டு கூட்டுத்தாபனமானது ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்களை வேலைக்கமர்த்தியிருந்தது டன் இது கூட்டுத்தாபனத்தின் செயலாற்றலை பாதிக்காத வகையில் உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும், ஊழியர்கள் தேவைப்பாடுகளின் பிரகாரம் வேலைக்கமர்த்தப்பட்டிருந் தார். | கூட்டுத்தாபனமானது ஊழிய தேவைப்பாடுகளை மதிப்பிட வேண்டியிருந்ததுடன் வெற்றிடங்களானது வேண்டப்பட்டவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் திருத்தப்பட வேண்டும். |
| (iii) | 737 ஆம் இலக்க உப ஒப்பந்த ஊழியர்கள் மீளாய்வாண்டினுள் இறுதியிலுள்ளவாறு தேவைக்கமர்த்தப்பட்டிருந்த துடன் 2018 ஆம் ஆண்டின் | வேலையின் அளவிற்கேற்ப நிர்மாண ஒப்பந்தம் இருந்தமையால் ஊழிய தேவைப்பாடானது நேரத்திற்கு நேரம் ஏற்பட்டது ஆகையால், | நிரந்தர ஊழியர்களிற்கு மேலாக வெளிவாரியாக வேலைக்கமர்த்தப்பட் ட ஊழியர்களின் |

| | | |
|---|---|---|
| போது சொல்லப்பட்ட ஊழியர்களிற்காக ரூபா 232,789,955 தொகை சம்பளங்களாக செலுத்தப்பட்டிருந்தது. | ஊழியர்களை நிரந்தர அடிப்படையில் வேலைக்கமர்த்துவதற்கு கஷ்டமானதுடன் ஊழிய ஒப்பந்தக்காரர்களினூடாக ஊழியர் சேவைகளை பெறுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது. | வேலைக்கமர்த்தும் தேவையினை கூட்டுத்தாபனம் மீள கருத்திற் கொண்டது. |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (i) கூட்டுத்தாபனத்தின் வருமான இனங்காணல் கூற்றின் பிரகாரம் 15 செயற்திட்டம் தொடர்பில் 2018 இல் உள்ளவாறு ரூபா 176,424,600 தொகையான நட்டங்கள் ஏற்பட்டது. | இந்த இலக்கங்களானது உண்மையான இலக்கங்களாக இல்லாதிருப்பதுடன் இந்த இலக்கங்களானது வருமானக் கூற்றில் மீளாய்வாண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட சீராக்கப்பட்ட தொகையிலிருந்து கணக்காய்வாளரால் ரூபா 110,513,988 எடுக்கப்பட்டதாகும். | கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவமானது நிதி நட்டங்களை குறைப்பதற்கும் இலாபத்தன்மையை அதிகரிப்பதற்கும் கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ii) 07 பாலங்கள், 06 வீதிகள், 07 கட்டிடங்கள், 03 நீர் மற்றும் இலத்திரனியல் செயற்திட்டங்கள் மற்றும் 01 ஏனைய செயற்திட்டத்தின் உண்மையான நிதிச் செயன் முன்னேற்றம் 2018 இன் இறுதியிலுள்ளவாறான இலக்கிடப்பட்ட நிதிச் செயன் முன்னேற்றத்துடன் ஒப்பிடும் போது 50 சதவீதத்தை விட குறைவாகவிருந்தது. | செயற்திட்டங்களின் நிதிச் செயலாற்றல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்களுடன் அறிக்கையிடப்பட்டிருந்தது டன் பட்டியல்கள் குறிப்பிடப்பட்ட செயற்திட்டங்கள் சரியாக இனங்காண முடியாமையால் குழப்பத்திற்குரியதாகவிருந் தது. எனினும், இச் செயற்திட்டங்களில் பல இப்போது பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் காசுப்பாய்ச்சல் பிரச்சினையிலிருந்தது தடுக்கும் வகையில் நல்ல நிதிச் செயன்முறையை பராமரிப்பதற்கு அதனுடைய கவனத்தை செலுத்த வேண்டும். |
| (iii) 2018 இன் இறுதியிலுள்ளவாறு 04 பாலங்கள், 05 வீதிகள், 07 கட்டிடங்கள், 05 நீர் வழங்கல் மற்றும் நீர்பாசன செயற்திட்டங்களின் மற்றும் 01 ஏனைய செயற்திட்டம் தொடர்பிலான இலக்கிடப்பட்ட பௌதீக செயன் முன்னேற்றத்துடன் | செயற்திட்டங்களின் நிதிச் செயலாற்றல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்களுடன் அறிக்கையிடப்பட்டிருந்தது டன் பட்டியல்கள் குறிப்பிடப்பட்ட செயற்திட்டங்கள் சரியாக இனங்காண முடியாமையால் | கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவமானது ஏற்றுக்கொள்ளப்பட்ட காலப்பகுதியினுள் அதனுடைய நிர்மாண செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு அதனுடைய கவனத்தை செலுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பிடும் போது உள்ளபடியான பௌதீக் செயன்முன்னேற்றமானது 50 சதவீதத்தை விட குறைவாக இருந்தது. என அவதானிக்கப்பட்டது. மேலும், இரண்டு வீதி செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது எந்த செயன்முறையும் காட்டியிருக்கவில்லை. | குழப்பத்திற்குரியதாகவிருந்தது. எனினும், இச் செயற்திட்டங்களில் பல இப்போது பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | |
| (iv) | 2017 இலிருந்து 2018 வரையான காலப்பகுதிக்காக வெளித்தரப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட ரூபா 10,587,000 பெறுமதியான கொங்கிறீட் உற்பத்தி கட்டளைகள் மற்றும் ரூபா 19,833,000 உள்ளக கட்டளைகள் குறித்த திகதிகளில் வழங்கப்பட்டிருக்கவில்லை மேற்கூறப்பட்ட கட்டளைகள் 2019 ஆகஸ்ட் ஆன கணக்காய்வு திகதி வரையிலும் வழங்கப்பட்டிருக்க இல்லையென மேலும் அவதானிக்கப்பட்டது. | இந்தப் பிரிவின் தற்போதுள்ள உற்பத்தி, இயலுமையினால், மொத்த கட்டளைகளை வழங்கமுடியாதிருந்தது. எனினும், இந்தக் கட்டணங்களிலிருந்தான 83% அளவு இதுவரையிலும் வழங்கப்பட்டிருந்தது. | அதிகூடிய இயலுமையை பெறுவதற்கு வளங்கள் பயன்படுத்தப்பட வேண்டியுள்ளதுடன் தாமதக் கட்டணங்களை இல்லாமல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டமும் செயல் நடவடிக்கைத் திட்டமும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 12 இன் பீஎவ்டி/ஆர்ஈடீ/01/04/2014/01 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2018 – 2021 ஆம் ஆண்டு காலப்பகுதி தொடர்பான கூட்டிணைந்த திட்டம் மற்றும் மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 – 2023 ஆம் ஆண்டிற்கான கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம் போன்றவற்றை 2019 ஆம் ஆண்டிற்கான பாதீட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நாளது வரையாக்கப்பட்ட வருடாந்த பாதீட்டுடன் ஒன்றாக செயல் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டு ஒவ்வொரு நிதியாண்டு தொடங்கி 15 நாட்களுக்குள் முகவராக உரிய அமைச்சு பொது முயற்சிகள் திணைக்களம் பொது திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டும். |